**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ம் நாள் புதன்கிழமை

**IA NO.62/2022**

**In**

**O.S No.46/2020**

சாமிநாதன்
(பொதுக்குடும்ப மேலாளர்
என்ற முறையில்)
மற்றும் இருவர் **........மனுதாரர்கள்/வாதிகள்**

**//எதிர்//**

1. வீரையா,
2. முத்துகிருஷ்ணன்,
3. வீரசேகர்,
4. யுவராஜ் **.......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கை.வீரமணி, எம்.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ப.சிங்காரவேலு, பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவானது மனுதாரர்/1-ம் வாதியால் மற்ற மனுதாரர்கள்/வாதிகளுக்காகவும் தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கு தங்களால் இதில்கண்ட எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில், இதில்கண்ட 2, 3 வாதிகளிடம் வழக்கு 9, 10-வது இலக்கச் சொத்துக்களை கடந்த 30.12.2021-ம் தேதியில் மனுதாரர்/1-ம் வாதி கிரையம் பெற்று மேற்படி சொத்துக்கள் தற்போது தனது அனுபோகத்தில் இருந்து வருகிறது என்றும், எனவே வழக்கு 9, 10-வது இலக்கச் சொத்துக்களை தாம் தற்போது கிரையம் பெற்றுள்ளதால் இந்த நம்பர் வழக்கில் வழக்கு பரிகாரகால் மற்றும் வழக்கு பாராக்களிலும் திருத்தம் செய்ய வேண்டியதாக உள்ளது என்றும், எனவே இந்த நம்பர் வழக்கினை மனுவில்கண்ட விபரப்படிக்கு பிராதை திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டியதாக உள்ளது என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனு சுத்தப் பொய்யானதாகும் என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியதாக உள்ளது என்றும், மனுதாரர் தனது பிரமாணப்பத்திரிக்கையில் 2-வது பாராவில் சொல்லியுள்ள விவரங்கள் முழுவதையும் எதிர்மனுதாரர்கள் மறுக்கிறார்கள் என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு எழுவினாவிற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றும், மேலும் மனுதாரர் வழக்கை தாமதம் செய்ய வேண்டும் என்பதற்காகவும், எதிர்மனுதாரர்களை அலக்களைவு செய்ய வேண்டும் என்கிற கெட்ட எண்ணத்துடனும் மனுதாரர் பல பொய்யான சங்கதிகளை கூறி மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் தனது மனுவில் 2, 3 வாதிகளிடம் வழக்கு 9, 10-வது இலக்கச் சொத்துக்களை கடந்த 30.12.2021-ம் தேதியில் மனுதாரர் கிரையம் பெற்றுவிட்டதாக தனது மனுவில் கூறுவது ஏற்புடையதல்ல என்றும், மனுதாரரால் 2020-ம் ஆண்டு எதிர்மனுதாரர்கள் மீது வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு 2 ஆண்டுகள் கழித்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது மேற்படி மனுதாரர் மனுவில் மேற்படி சொத்துக்களை கிரையம் பெற்றது "LIS PENDENS" என்ற சட்ட விதிப்படி பாதிப்பிற்குள்ளான ஒன்றாகும் என்றும், மேற்படி கிரையம் சட்டப்படி செல்லாத நிலையில் அதை பொறுத்து வழக்கு சொத்து விபரத்திலும், வழக்கு பரிகாரங்களிலும் பிராதில் திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர் தற்போது மனு செய்திருப்பது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை பொறுத்து 'AFTER THOUGHT' -ஆக இந்த

மனுவில் வழக்கு சொத்துவிபரத்தையும், வழக்கு பரிகாரத்தையும் திருத்த வேண்டி மனுதாரர் மனு செய்வது நியாயத்திற்கு புறம்பானது என்றும், மனுவில் கூறியுள்ள காரணங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை என்றும், வழக்குரையில் திருத்தம் செய்துகொள்ள எவ்வித அவசியமும் இல்லை என்றும், மனுதாரர் நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் விதமாக செயல்படுகிறார் என்றும், மனுதாரர் தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றும், எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் மேற்படி மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**6. பிரச்சனைக்கான தீர்வு:-**

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் வழக்கு 9 மற்றும் 10-வது இலக்க சொத்துக்களை 2, 3 வாதிகளிடமிருந்து 1-ம் வாதி 30.12.2021-ல் கிரையம் பெற்றிருப்பதை தொடர்ந்து வழக்கு பரிகாரம் மற்றும் வழக்கு பாராக்களில் திருத்தம் செய்ய வேண்டியது என்றும், வழக்கு 1-வது இலக்க சொத்து விபரத்தில் நான்கெல்லையில் 2-ம் வாதிக்கு சொந்தமான சொத்து என்பதை நீக்கிவிட்டு 1-ம் வாதிக்கு சொந்தமான சொத்து என புதிதாக சேர்க்க உத்தரவிட வேண்டியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்து 2 ஆண்டுகள் கழித்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2, 3 வாதிகளிடமிருந்து 1-ம் வாதி கிரையம் பெற்றது "Lis pendens" கோட்பாட்டின் அடிப்படையில் பாதிப்புக்குள்ளான ஒன்று என்றும், அதனடிப்படையில் எதிர்மனுதாரரின் எதிர்வழக்குரையைப் பொறுத்து பின் யோசனையாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

3) தாவா வழக்கானது எழுவினாக்கள் வனைவதற்காக நிலுவையில் உள்ளது. விசாரணைக்கு முந்தைய திருத்தல் மனுக்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

**AIR 2008 SUPREME COURT 2303**

**2008 AIR SCW 4007**

"Pre-trial amendments are to be allowed liberty than those which are sought to be made after the commencement of the trial. The opposite party is not prejudiced because he will have an opportunity of meeting the amendment sought to be made. In the latter case, namely, after the commencement of trial, particularly, after completion of the evidence, the question of prejudice to the opposite party may arise and in such event, it is incumbent on the part of the Court to satisfy the conditions prescribed in the proviso."

4) நிகழ்வழக்கு கோட்பாடு என்பது வழக்கு நடக்கும்போது ஏற்படும் கிரையங்களை முழுவதுமாக தடை செய்வது இல்லை. மாறாக வழக்கின் தீர்வு வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழக்கு சொத்தை கிரையம் பெறும் கிரையதாரர்களை கட்டுப்படுத்துமே தவிர மேற்படி கிரையம் இல்லாநிலையது ஆக கருதமுடியாது. எனவே இந்த மனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரமானது வழக்கின் தீர்வுக்கான அத்தியாவசியமான பரிகாரம் என்பதாலும், மேற்குறிப்பிட்ட உச்சநீதிமன்றம் தீர்ப்பின் அடிப்படையில் இதனால் எதிர்மனுதாரர்களுக்கு குந்தகம் எதுவும் ஏற்படாது என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2023-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/- V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர்கள் தரப்புச் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்புச் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-</u>** இல்லை

**//உண்மை நகல்//**

V SIVAGAMASUNDARY

Digitally signed by V SIVAGAMASUNDARY
Date: 2023.04.12 17:15:42 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**வரைவு / செவ்வை உத்தரவு**

**I.A. No.62/2022**

**O.S.No.46/2020**

**நாள் 12.04.2023.**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**அறந்தாங்கி.**